விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 363 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 01 திங்கட்கிழமை (16.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

பொலிஸார் என்ற போர்வையில்
## வெள்ளை வானில் சென்று தாக்குதல்
குடும்பஸ்தர் படுகாயம்



11ஆம் பக்கம் பார்க்க

## ஏப்ரலில் உள்ளூராட்சி; செப்.இல் மாகாண சபை தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டம்


03ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டித் தீர்வை அநுரவிடம் வலியுறுத்துக
பாரதப் பிரதமருக்கு முன்னணி கடிதம்



06ஆம் பக்கம் பார்க்க

## தனிநபரின் பாதுகாப்புக்காக கோடிகளில் செலவிட முடியாது
மகிந்தவின் பாதுகாப்புத் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)
தனிநபர்களின் பாதுகாப்புக்காகப் பணத்தைக் கோடிகளில் செலவிட முடியாது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு 60 பொலிஸாரும் முப்படையைச் சேர்ந்த 231 பேரும் 02

## மகிந்தவைக் கொல்லவே பாதுகாப்புக் குறைப்பு
கதறுகிறது பெரமுன

(கொழும்பு)
"தமிழ் டயஸ்போராக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது.
ஆதலால்தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்புத் தற்போது குறைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. 15

## கரவெட்டி இளைஞன் காய்ச்சலால் மரணம்
எலிக் காய்ச்சல் எனச் சந்தேகம்




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பரவி வரும் மர்மக் காய்ச்சலால் கரவெட்டியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
கரவெட்டி - 04

# இந்திய அமைச்சர்களுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு
முக்கிய விடயங்கள் ஆராய்வு



(புதுடில்லி)
ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு நேற்று இந்தியா சென்றடைந்தார்.
இந்தியா சென்ற ஜனாதிபதி அநுர, பல்வேறு அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.
(04ஆம் பக்கம் பார்க்க)

சேமமடுக் குளத்திலிருந்து
## அரச உத்தியோகத்தர் சடலமாக மீட்பு



(வவுனியா)
வவுனியா சேமமடுக் குளத்தின் வான் பகுதியில் நேற்று அரச உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வன ஜீவராசிகள் திணைக்களத்தில் 15

## சிறீதரன் எம்.பி கனடா பயணம்
(கொழும்பு)
கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டப் பாராளு 15

## வடக்கில் படிப்படியாக காணி விடுவிக்கப்படும்
அமைச்சர் சந்திரசேகர்
(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 2 ஆயிரத்து 624.29 ஏக்கர் நிலப்பரப்பு 15

## தொடர் மழை 543 பேர் பாதிப்பு
(கொழும்பு)
நாட்டில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 543 15

## பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய மூவர் கைது
தருமபுரத்தில் சம்பவம்
(கிளிநொச்சி)
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ35 பிரதான வீதியில் சுண்டிக்குளம் பகுதியில் நேற்றிரவு வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், தலைக் 15

## யாழில் எலிக்காய்ச்சல் நிலைமை கட்டுக்குள்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவி வந்த எலிக்காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகத்தின் முதன்மை நாளிதழ்

- அதிக வாசகர்கள்
- அதிக விற்பனை

உங்கள் வலம்புரி

25 ஆண்டு நிறைவில்

வெள்ளி விழாக் காண்கிறது

இடம் : நல்லூர் துர்க்கா மணி மண்டபம்

காலம் : 20.12.2024 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணி

வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி அழைக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

# தமிழரசுக் கட்சியின் தலைவர் யார்?

## 28 இல் முடிவு

(வவுனியா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி தீர்க்கமான முடிவொன்று எட்டப்படும் என எதிர்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் இடம்பெறவுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எட்டப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தைத் தலைமை தாங்குபவர் தொடர்பில் அமைதியின்மை ஏற்பட்டது.

நீண்ட நேரக் கருத்தாடல்களின் பின்னர், மாவை சேனாதிராசாவின் பதவி விலகலை மீளப்பெற அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் அடுத்த கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தனிநபரின்...

பாதுகாப்புக்காக தற்போதும் உள்ளனர். ஆனால் எதிர்க்கட்சியினர் அதனை மறைத்து அவரது உயிருக்கு ஆபத்து என்று பொய்யான பிரசாரங்களைச் செய்து, மக்களைத் திசை திருப்புவதற்கான சூழ்ச்சியை முன்னெடுக்கின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதிகளில் எந்த ஒருவரினதும் பாதுகாப்புத் தொடர்பில் புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொலிஸாரே தீர்மானம் எடுக்கின்றார்கள். அந்தத் தீர்மானங்களில் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்று நாங்கள் தலையீடுகளைச் செய்வதில்லை.

அந்த வகையில் பொலிஸார், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்புக்காக 60 பொலிஸார் வழங்கப்பட்டுள்ளனர்.

மேலும் இராணுவத்தைச் சேர்ந்த 64 பேர் உள்ளடங்கலாக முப்படைகளைச் சேர்ந்த 231 பேர் பாதுகாப்புக்காக இன்னமும் உள்ளனர்.

ஆனால் அந்த விடயத்தினை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மறைத்துவிடுகின்றார்கள்.

அதேநேரம், நாட்டின் தேசிய பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றபோது, தனிநபர்களுக்கான பாதுகாப்புக்காக கோடிக் கணக்கில் செலவிடமுடியாது.

அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் கூட இன்னமும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பெற்றுக்கொள்ளாமல் உள்ளனர்.

ஆகவே, அரசாங்கத்தின் மீது அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ந-7)


# ஓராண்டு நினைவஞ்சலி





அமரர் சிவபாதம் சிவசுதன்

பில்லா சுதன்

தோற்றம் 1983.12.29 மறைவு 2023.12.16

ஓராண்டும் வெகுவிரைவில் வந்துவிட்டதையா!
நாளும் பொழுதும் மாதமும் உருண்டோடியது
வெகு விரைவில் ஓராண்டும் வந்ததையா!
அம்மாவின் கண்களில் கண்ணீர் சொரியுதையா
ஒவ்வொரு நொடியிலும் என் பிள்ளைவாறானே
ஐயா சுதன் எனக்கு கேற் சத்தம் கேட்கிறது
உன் பைக் கீச்சென்ற ஒலி கேட்கிறது
பார்த்த கண்ணும் பூத்துப்போச்சையா
ஒவ்வொரு மாதம் தவறாமல் - சுதன்
உன்னைக் கூப்பிட்டு அழைப்பேனே
என் மூச்சுக் கூட நின்றிடுமோ!
என் செய்வேன்! எங்கு எப்போ உன்னை கூப்பிடுவேன்
யார் அறிவார் என் வேதனையை - நீ
திரும்பும் திசை எல்லாம்
ஒளியாய் தெரியுமடா
உன் காலடி காண எனக்கு
மெய் சிலிர்த்துப் போகுமையா - ஐயா
நீ விண் நோக்கிச் சென்றாலும் என்
கண்விட்டு மறையாமல் என்
கண்முன்னே நிற்பாயய்யா
ஆயிரம் நட்சத்திரங்கள் நடுவில் ஒளிரும்
சுதன் நிலவில் அழகனடா
ஆயிரம் பேர் கறுப்பழகனடா என்பார்கள்
யாருடனும் அன்பாய் இருப்பாயடா உன்
அன்பிற்கு யாரும் ஈடாகாதடா
அம்மாவின் மூச்சு நின்றிடுமோ ஐயா!



(C-1810)

உன் நினைவால் வாடும் : உன் அம்மா, அப்பா, ...
சகோதரன் தர்சன், மருமக்கள், பெறாமகன்மார், ...

## வீடு விற்பனைக்கு

நாவலர் றோட், அன்னசத்திர லேனில் 1 ½ பரப்பில் ஆறு அறைகள் கொண்ட அழகிய மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ள

076 639 4574
077 370 7195

(1856)

# ஆண்டு பத்தொன்பதில் நினைவு கூருகின்றோம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கு



அமரர் கணபதிப்பிள்ளை கணேசன்

தோற்றம் 17.07.1927 மறைவு 16.12.2005

திதி : அபரபக்க பிரதமை (16.12.2024)

என்றும் உங்கள் புனித ஆத்மா எங்களை ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தன்னாலை மத்தி, ...வட்டி.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரலில் உள்ளூராட்சி தேர்தல் செப்ரெம்பரில் மாகாணசபை தேர்தல்?

## அநுர அரசு திட்டம்



(கொழும்பு)

**அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், செப்ரெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அடுத்த வருடம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான திகதிகளை அரசு தீர்மானித்துள்ளது என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களைக் கோரும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் மாத தொடக்கத்தில் நடத்தவும். 7 ஆண்டுகளுக்கும் மேலாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை செப்ரெம்பர் மாதம் நடத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்கத்தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இஸ்ரேலில் இருந்து

## நாடு கடத்தப்படும் இலங்கையர்கள்

(கொழும்பு)

இஸ்ரேலுக்கு சென்றிருந்த 17 இலங்கையர்கள், அவர்களது வேலை ஒப்பந்தங்களை மீறிய நிலையில், நாடு கடத்தப்படுவதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

நாடு கடத்தப்படுபவர்கள், விவசாய வேலைகளுக்கான விசாக்களில் இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

எனினும் அவர்கள் நியமிக்கப்பட்ட பணியிடங்களை விட்டு வெளியேறி, வெதுப்பகங்களில் பணிபுரிந்தனர்.

இந்நிலையில் இஸ்ரேலிய அதிகாரிகள் ஆய்வுகளின் போது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதுடன், நாடு கடத்தப்படவுள்ளனர். இஸ்ரேலை பொறுத்த வரையில், வெளிநாட்டு தொழிலாளர் நடைமுறைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

அத்துடன், வெளிநாட்டு பணியாளர்கள் அவர்களது அசல் விசா ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படாத வேலை வகைகளுக்கு மாறுவதை கண்டிப்பாக தடை செய்கிறது என்று இலங்கை தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.(நி-8)

## முதல் வெளிநாட்டு பயணமாக

# இந்தியாவை தெரிவு செய்தமை சாதகமான விடயம்

## அநுரவின் விஜயம் குறித்து இந்திய ஆய்வாளர் கருத்து

(டில்லி)

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவை தனது முதலாவது வெளிநாட்டு பயணத்திற்கு தெரிவு செய்துள்ளமை, இந்தியா அவருக்கு முன்னுரிமைக்குரிய விடயம் என்பதை காண்பிக்கின்றது என புதுடில்லியை தளமாக வெளிவிவகார பாதுகாப்பு விவகாரங்களிற்கான ஆய்வாளர் சிறிபதி நாராயணண் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டு ள்ளதாவது,

ஜனாதிபதி தேர்தலின் பின் னர் அவர் பாராளுமன்ற தேர் தலை நடத்த விரும்பியதால் இந்தியாவிற்கான அவரது விஜயம் தாமதமானது.

இப்போது அந்த தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் இலங்கை ஜனாதிபதி இந்தி யாவை தனது முதலாவது வெளிநாட்டு பயணத்திற்கு தெரிவு செய்துள்ளமை சாதகமான விடயம். ஏனைய நாடுகளிற்கு செல்வதற்கு முன்னர் அவர் இந்தியாவை தெரிவு செய்துள்ளார்.

இது இந்தியா அவருக்கு முன்னுரிமைக்குரிய விடயம் என்பதை காண்பிக்கின்றது.மேலும் ஜனாதிபதி ஏகேடி ஜேவிபி யுடன் தொடர்புபட்டவர்.

ஜேவிபி இந்திய எதிர்ப்பு ஆயுதக்குழு என்ற வரலாறுள்ளது, இந்த விஜயம் தனது கட்சியை மக்கள் பார்க்கும் விதத்தை அவர் மாற்றுகின்றார் என்பதை காண்பிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

பழைமைவாத சிங்களவர்கள், பழைமைவாதமற்ற சிங்களவர்கள், முஸ்லீம்கள், தமிழர்கள் உட்பட பல குழுக்களின் ஆதரவுடன் திஸாநாயக்க பாராளுமன்ற தேர்தலில் தீர்க்கமான வெற் றியை பெற்றுள்ளார்.

இந்த குழுக்களை பிரதிநி தித்துவம் செய்யும் பாரம்பரிய கட்சிகள் இம்முறை மக்கள் ஆதரவை பெறவில்லை. இதன் அர்த்தம் என்ன வென்றால் இலங்கை ஜனாதி பதி ஒரு குழுவை பிரதிநிதித்துவம் செய்யவில்லை, நாடளாவிய வாக்காளர்களின் நம்பிக்கையை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

ஜேவிபி தனது ஆதரவாளர் தளத்தினை வழமையான நிலைக்கு அப்பால் விஸ்தரித் துள்ளதால் ஜனாதிபதி முழு தேசத்தையும் பிரதிநிதித்துவம் செய்கின்றார் இது ஜேவிபிக்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொருளாதாரம் என்ற விடயத்தில் பல கட்சிகள் பிரச்சினைகளை எதிர் கொண்டதாலும் மக்களின் நம்பிக்கையை இழந்ததாலும் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றார்.

பொருளாதாரம் நெருக்கடியான நிலையில் உள்ளது, புதியதலைவர் இதனை மாற்றுவார் என மக்கள் எதிர்பார்க் கின்றனர்.

இலங்கையின் வெளிவிவகார கொள்கையை பொறுத்த வரை இந்த விஜயம் இந்தியா சீனா தொடர்பான உறவுகளில் பெரும் மாற்றத்தை வெளிப்படுத்தவில்லை. (நி-8)

# மரண அறிவித்தல்



## திருமதி.சரஸ்வதி தம்பிதுரை

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கதிரமலைசிவன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சரஸ்வதி தம்பிதுரை அவர்கள் 14.12.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் அமரர்.தம்பிதுரையின் பாசமிகு மனைவியும் அமரர்.ராசதுரை, ஐயாதுரை, செல்லதுரை, நடராசா, சிவராசா, தவமணிதேவி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிர்மலாதேவி, சாரதாதேவி (கனடா), லலிதாதேவி(பிரான்ஸ்), ஸ்ரீபாஸ்கரன், ஜெயபாஸ்கரன் (லண்டன்), தவபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சேனாதிராஜா, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன்,காலஞ்சென்ற இரத்தினசிங்கம், டிசாகினிதேவி, கீதா, தஜனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமரர். சியாமளா,பிறேமலா(லண்டன்), சர்மிளன், சஜந்தன் (பிரான்ஸ்), அனுசியா (கனடா),சசி, சறூன்(பிரான்ஸ்), லோரன்ஸ், தர்சன், பிரசாந்த் (கனடா), ரஜீதா, ரஜீபன், கார்தீபன் (பிரான்ஸ்), நிரோசன், சிந்துஜா, கஜீவனா, அஸ்வினி, கஸ்வினி, கனீஸ்(லண்டன்), மாதுளா, மிகுதன் தரணிகன்(பிரான்ஸ்) , காலஞ்சென்றவர்களான சுவர்ணன் , துளசி, புவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அபிநயா, டிசாந், விபிசாந், அக்சயா, அஸ்வித், பிருந்தாபன், தரண்யா, பிரஜித், குருபிரசாந் ஆகியோரின் பாசமிகு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2024 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்

சுன்னாகம் (சி-1805) தொடர்புகளுக்கு-077 083 0976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்ஸ்வால் இல்லாமல் பேருந்தில் புறப்பட்ட இந்திய அணி

## நடந்தது என்ன?




இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் தொடரில் விளையாடி வருகிறது. பும்ரா தலைமையிலான முதல் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி ரோஹித் தலைமையிலான இரண்டாவது போட்டியில் தோல்வியைத் தழுவி இருக்கிறது.

பலரும் ரோஹித் சர்மாவின் கேப்டன்ஷியை விமர்சித்தனர். தற்போது பிரிஸ்பேனில் நடை பெறவுள்ள மூன்றாவது போட்டிக்கு இந்திய அணி தயாராகி வருகிறது.

இதனைத்தொடர்ந்து அடிலெய்டில் இருந்து பிரிஸ்பேன் செல்வதற்காக கிளம்பிய இந்திய அணியின் டீம் பஸ்ஸில் இளம் வீரரும் இந்திய அணியின் தொடக்க பட்ஸ்மேனுமான யஷஸ்வி ஜெய்ஸ்வால் பயணிக்கவில்லை. இதற்கான காரணம் என்ன என்பது குறித்த சில தகவல்கள் வெளியாகியுள்ளது.

அடிலெய்டில் இருந்து பிரிஸ்பேன் செல்வதற்காக இந்திய வீரர்கள் தயாராக இருந்துள்ளனர்.

அவர்களுடன் பயிற்சியாளர்கள், அணியின் உதவியாளர்களும் தயாராக இருந்துள்ளனர். இரண்டு பேருந்துகள் அவர்களை அழைத்துச் செல்ல வந்துள்ளது.


ரோஹித் சர்மா, கவுதம் கம்பீர், விராட் கோலி உள்ளிட்ட அனைத்து வீரர்களும் பேருந்தில் ஏறி நீண்ட நேரம் காத்திருந்தும் வராததால் பிறகுஜெய்ஸ்வால் இல்லாமல் பேருந்து புறப்பட்டுள்ளது.

இதன்பின், 20 நிமிடங்களுக்கு மேலான பிறகு ஹோட்டலின் லாபிக்கு வந்த ஜெய்ஸ்வால் அணியினர் புறப்பட்டு சென்றதைப் பார்த்திருக்கிறார்.

அதன் பிறகு ஜெய்ஸ்வாலுக்காக பாதுகாவலர்கள் அடங்கிய காரை இந்திய அணி ஏற்பாடு செய்திருக்கிறது.

அதில் ஏறி, விமான நிலையம் சென்று அணியினர் உடன் அவர் இணைந்திருக்கிறார் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-8)

# 3 ஆவது போட்டி மழையால் ரத்து தொடரை வென்றது தென் ஆபிரிக்கா



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இரு போட்டிகளில் தென் ஆபிரிக்கா வெற்றி பெற்று தொடரை 2-0 எனக் கைப்பற்றியது. மழை காரணமாக 3 ஆவது ரி-20 போட்டி ரத்து செய்யப்படுகிறது என நடுவர் கள் அறிவித்தனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரி-20, ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதல் இரு போட்டிகளில் தென் ஆபிரிக்கா வெற்றி பெற்று தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.


இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ரி-20 போட்டி ஜோகன்னஸ்பர்கில் நேற்று முன்தினம் நடைபெற இருந்தது.

அப்பகுதியில் மழை தொடர்ந்து பெய்தது. இதனால் போட்டிக்கான டொஸ் போடுவதில் தாமதம் ஏற்பட்டது. ஆனாலும் மழை நிற்காமல் பெய்தது. இதையடுத்து, மழை காரணமாக போட்டி ரத்து செய்யப்படுகிறது என நடுவர்கள் அறிவித்தனர் .

போட்டி கைவிடப்பட்டாலும் தென் ஆபிரிக்கா ரி-20 தொடரை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (ரி-8)

# இந்திய பட்மிண்டன் வீராங்கனை சிந்துவுக்கு நிச்சயதார்த்தம்

இந்தியா சார்பில் ஒலிம்பிக்கில் பங்கேற்று 2 முறை பதக்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர் பட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து.




முன்னாள் உலக சம்பியனான சிந்து, தெலுங்கானாவின் ஐதராபாத் நகரை சேர்ந்த வெங்கட தத்தா சாய் என்பவரை திருமணம் செய்ய இருக்கிறார்.

சிந்துவின் வருங்கால கணவர் போசிடெக்ஸ் டெக்னாலஜீஸ் என்ற நிறுவனத்தின் செயல் இயக்குநராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சிந்துவுக்கும் வெங்கட தத்தா சாய்க்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. இது தொடர்பான புகைப்படங்களை சிந்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில், கலீல் ஜிப்ரானின் கவிதையான "அன்பு உங்களை அழைக்கும் போது. அதைப் பின் தொடருங்கள். ஏனென்றால் அன்பு தன்னைத் தவிர வேறு எதையும் கொடுக்காது" என்று பதிவிட்டுள்ளார்.

இவர்களின் திருமணம் வரும் 22 ஆம் திகதி உதய்பூரில் நடைபெற உள்ளது. திருமணம் தொடர்பான நிகழ்ச்சிகள் 20 ஆம் திகதி தொடங்கி விடும் என்றும் 24 ஆம் திகதி ஐதராபாத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்றும் சிந்துவின் அப்பா தெரிவித்தார்.

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு சிந்து திருமண அழைப்பிதழ் வழங்கியுள்ளார். (ரி-8)

## இந்திய ....

அதன் ஒரு கட்டமாக நேற்றிரவு இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி முருகன் மற்றும் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடல்களின் போது இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தொழில் அமைச்சர் அனில்ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் உடனிருந்தனர்.

இதே வேளை ஜனாதிபதி அநுர குமாரவின் இந்திய விஜயத்தின் முக்கிய அம்சமாகப் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது இனப்பிரச்சினை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக இந்திரா காந்தி விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி அநுரவுக்கு அங்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி எஸ்.முருகன், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர வலயத்தின் மேலதிகச் செயலாளர் புனித் அகர்வால் இந்திய உபசரணைப் பிரதானி அன்ஷுமன் கவூர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பளித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் விஜயம் தொடர்பில் இந்திய ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்டதுடன் புதுடில்லி நகரின் பிரதான சுற்றுவட்டாரத்தில் ஜனாதிபதி அநுர மற்றும் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படங்கள் அடங்கிய பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கரவெட்டி ....

தில்லையம்பலம் பகுதியைச் சேர்ந்த கிருபாகரன் கிருசாந்தன் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளைஞனுக்கு எலிக்காய்ச்சலுக்குரிய அறிகுறிகள் காணப்பட்டதாகவும், இளைஞனின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பரிசோதனை முடிவிலேயே எலிக் காய்ச்சலா என்பதனை உறுதிப்படுத்த முடியும் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இளைஞனின் மரண விசாரணை நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களில் காய்ச்சல் காரணமாக மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்த இளைஞனுடன் உயிரிழப்பு எட்டாக அதிகரித்துள்ளது.

இதுவரையில் உயிரிழந்த மூவருக்கு எலிக்காய்ச்சல் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை யாழில் சுமார் 70 பேர் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை

**01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு பளைநகர பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2025**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 16.12.2024 தொடக்கம் 29.12.2024 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி:- 30.12.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.12.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | பளை பொதுச்சந்தை | 1,925,115.00 | 28,876.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 59,553.87 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 30.12.2024 ஆம்திகதிபிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.
04. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5 அம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை கேள்வித் தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
07. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே ஆடு அறுத்தல் வேண்டும்.
09. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தயானந்தன் தர்சினி,**
**செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** (சி-1806) **16.12.2024.**

# அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட முதலாவது அரிசி தொகுதி இன்று நாட்டுக்கு



(கொழும்பு)

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட முதலாவது அரிசி தொகுதி இன்று இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி முதல் அரிசியை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய நிலையில், 2,400 மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகச் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசித் தொகை சுகாதாரத் திணைக்களத்தின் தரப்பரிசோத னையின் பின்னர் விடுக்கப்படும் எனச் சுங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலிஅருக்கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் இறக்குமதியாளர்களி னால் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு ஒவ்வாதநிலை மற்றும் தெளிவற்ற விபரங்கள் காரணமாகச் சுங்கத்திலிருந்து விடுவிக்காதிருக்கத் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த அரிசியை மீள் ஏற்றுமதி செய்யுமாறு சுங்கத் திணைக்களம் சம்பந்தப்பட்ட இறக்கு மதியாளர்களுக்கு அறிவித்துள்ளது.

கையிருப்பில் உள்ள பாவனைக்கு ஒவ்வாத அரிசியை மீள் ஏற்றுமதி செய்யாவிட்டால் பறிமுதல் செய்து அழிக்கப்படும் என இறக்கு மதியாளர்களுக்குச் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-8)

# இராசிபலன்

16.12.2024
மார்கழி 01, திங்கட்கிழமை
பிரதமை பிற்பகல் 1.57 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 3.25 மணிவரை

சுபநேரம் -12.22-1.52 மணிவரை
இராகுகாலம் 7.52-9.22 மணிவரை
சித்தாமிர்தம்
விநாயகர் விரதாரம்பம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகை யொன்று நட்பாக லாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திக ளால் உற்சாகமடை வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், சஞ்சலங்கள் சற்றுக் கூடும்.

**துலாம்** உறவினர்கள் வழியே மனநிறைவான செய்தி கள் வந்து சேரலாம், உடல் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், ஆரோக் கியம் சீராகும், செய் தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேர லாம்.

**இடபம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய் ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, தொலை பேசிவழியில் கேட்கும் செய்தி களால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட் டங்கள் தீட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்ப வங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர் களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்** நட்பு வட்டம் விரி வடையும் நாள், பிள் ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், சொத்துக்கள் சம்பந் தப்பட்ட வகையில் நன்மை யுண்டு.

**மிதுனம்** ஒருவகையில் சிக்க னமாக இருந்தாலும் மற்றொருவகையில் விரயங்கள் ஏற்பட லாம், உடல் நலனில் கவனம் தேவை, பொது நல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைநேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொரு ட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு.

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்தி கள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**உலகில் மிகவும் தெய்வீகமானது சக மனிதர்களிடம் நீங்கள் காட்டும் அன்பும் பரிவும் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டித் தீர்வை எட்ட இலங்கையை வலியுறுத்தவும்

## இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கையில் தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சியை கைவிட்டு தமிழ்த் தேசம் அதன் இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை எட்ட இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி அநுர இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ள நிலையில் அனுப்பப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுவாக கடந்த 75 ஆண்டுகால கொள்கைகளும் குறிப்பாக தீர்க்கப்படாத இனப் பிரச்சினையும் இலங்கையை பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

இயற்கையாகவே எதிர்காலம் கணிசமாக சிறப்பாக இருக்க வேண்டுமானால், எதிர்காலத்திற்கான கொள்கைகள் கணிசமாக வேறுபட்டிருக்க வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 36 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அது கொண்டுவரப்பட்ட காலத்தை விட நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

இலங்கையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கத்திற்கு அண்மையில் வழங்கப்பட்ட மக்கள் ஆணையானது முழுமையான முறைமை மாற்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளமை, வழமை போன்று வியாபாரம் இனி சாத்தியமில்லை என்பதை உணர்த்துகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று ஒற்றையாட்சி அமைப்பு. இலங்கையின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, மாநிலத்தின் கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை, அர்த்தமுள்ள சுயாட்சி மற்றும் சுயராஜ்யத்தை அடைய முடியாது என்ற அடிப்படையில் தமிழர்கள் அதை நிராகரித்தனர்.

இதேவேளை நாட்டின் உயர் நீதிமன்றங்களில் இருந்து 30 இற்கும் மேற்பட்ட நீதித்துறை தீர்ப்புகள் உள்ளன, அவை அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை கொழும்பில் உள்ள அரசாங்கம் அனைத்து அதிகாரங்களின் ஒரே களஞ்சியமாக இருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# பண்பாட்டுப் பெருவிழாவும் கண்காட்சியும்


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாட்டில் வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவும் பாரம்பரிய வாழ்வியல் அடங்கிய கண்காட்சியும் மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகர சபை மண்டபத்தில் நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு மன்னார் பாலத்திலிருந்து ஆரம்பமாகி நடைபெறவுள்ள பண்பாட்டு ஊர்வலத்தினைத் தொடர்ந்து கண்காட்சியும் விழாவும் மாலை வரை நடைபெறும்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக நாட்டுக்கூத்து கலைஞர் கலாபூஷணம் செ.மாசிலாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# மீண்டும் வெள்ளத்தில் மகிழங்கேணி கிராமம்



(சாவகச்சேரி)


தென்மராட்சியின் பல கிராமங்கள் கடந்த நவம்பர் மாத இறுதியில் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டிருந்தன.

மக்கள் அந்த வெள்ள இடரில் இருந்து மீள முன்பாகவே தற்போது மீண்டும் பெய்து வரும் மழை காரணமாக சில கிராமங்கள் மீண்டும் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளன.

குறிப்பாக தென்மராட்சியின் மகிழங்கேணி கிராமத்தில் உள்ள குழாய்க் கிணறுகள் அனைத்தும் கடந்த இரு தினங்களாக நீரை தாமாக வெளித் தள்ளி வருகின்றன.

அத்துடன் சில கிராமங்களில் வெள்ளத்தை நீர்ப் பம்பிகள் ஊடாக தொடர்ச்சியாக நான்கு தினங்கள் இறைத்து கடலுக்கு கடத்தியுள்ள நிலையில் தற்போது மீண்டும் பொழிகின்ற மழை மீளவும் அப்பகுதி மக்களை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரப் பலகைகளை கடத்தியவர்கள் கைது



(சாவகச்சேரி)

நாவற்குழிப் பகுதியில் வைத்து 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரப்பலகைகளை மல்லாவியில் இருந்து டிப்பர் வாகனத்தில் சட்டவிரோதமாக எடுத்து வந்த இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப் பத்திரத்துடன் கூடிய மரப்பலகைகளை மேற்புறமும் அனுமதிப் பத்திரம் இன்றிய மரப் பலகைகளை டிப்பர் வாகனத்தின் கீழ்புறமும் வைத்து மறைத்து எடுத்து வந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாவற்குழிப் பகுதியில் வழிமறிக்கப்பட்டு சோதனையின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸார் டிப்பர் வாகனத்துடன் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை, தேக்கு மற்றும் வேப்ப மரப் பலகைகளையும் மீட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களான ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். (நி-8-30)

# சட்டவிரோத மணல்களுடன் சாரதிகள் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-32 வீதியூடாக சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர் வாகனங்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றியிருப்பதுடன் அதன் சாரதிகளை யும் கைது செய்துள்ளனர்.

அனுமதிப்பத்திர மணலை மேலே பரவி அதன் கீழாக வெள்ளை மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மணற் கொள்ளையர்கள் ஒரு தடவைக்கான அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு அன்றைய நாள் முழுவதும் வெள்ளை மணல் கடத்தலில் ஈடுபடுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரிப் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்; பேச்சுக்களை மீள ஆரம்பிக்க சீனா தீர்மானம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாடுகளை விரிவுப்படுத்துவது குறித்து சீனா ஆர்வம் செலுத்தியுள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான இணக்கப்பாட்டை கடந்த அரசாங்கத்துடன் எட்டியிருந்தது.

இந்நிலையில், தற்போது அம்பாந்தோட்டையில் இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பாரிய முதலீட்டில் நிர்மாணிக்க சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டையில் உருவாக்கி இந்த பிராந்தியத்தில் எண்ணெய் ஆதிக்கத்தை மாற்றுவதற்கான திட்டமாகவே இது உள்ளது.

மேலும், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் சீன விஜயத்தின் போது துறைமுக நகர் குறித்தும் ஆலோசிக்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக துறைமுக நகர் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக துரிதப்படுத்த சீனா தீர்மானித்துள்ளது.



மேலும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் மூலோபாய ஒத்துழைப்புகளை முன்னிலைப்படுத்தி சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கான விசேட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் பிரகாரம் பல சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தன.

இருப்பினும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி காலத்தில் ஏற்பட்ட இராஜதந்திர நெருக்கடியால் சீனக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவது ஒரு வருட காலத்திற்கு நிறுத்தப்பட்டது.

அந்த கால எல்லை எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதன்படி ஜனவரி 15 ஆம் திகதிக்கு பின்னர் சீனக் கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும். ஆனால் சீனக் கப்பல்களுக்கு எத்தகைய அனுமதியை அரசாங்கம் கொடுக்கும் என்பது குறித்து உறுதியான நிலைப்பாடு இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை.

மறுபுறம் இலங்கையை மையப்படுத்திய இந்திய - சீன இராஜதந்திர அழுத்தங்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அரசாங்கத்தின் விசேட குழு ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

# காங்கேசன்துறை-நாகை படகுச்சேவை ஜனவரியில் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகுசேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாரத்துக்கு ஆறுநாட்கள் மேம்பட்ட வசதிகளுடன் ஆரம்பமாகவுள்ளதாக சுபம் குழுமத்தின் தலைவரும் காங்கேசன்துறை, நாகைப்பட்டினம் படகுச்சேவை முதலீட்டாளருமான பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலூம் தெரிவிக்கையில்,

எமது பிறிதொரு நிறுவமான சுபம் நிறுவனம் காங்கேசன் துறை, நாகைப்பட்டினத்துக்கு இடையிலான படகுசேவையில் முதலீடுகளைச் செய்துள்ளது. இதனையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தப் படகுசேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் காலநிலை முன்னெச்சரிக்கையின் காரணமாக தற்காலிகமாக சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் காங்கேசன்துறைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு இதனை சுபம் நிறுவனமே நேரடியாக கையாளப் போகின்றது.

மீள படகுசேவை ஆரம்பிக்கப்படும்போது, சில மேம்பட்ட வசதிகளை முன்னெடுத்துள்ளோம். முக்கியமாக சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்கும் நோக்கத்தில் பயணக்கட்டணங்களை மாற்றியமைத்துள்ளோம்.

தற்போது இருவழிக் கட்டணமாக 9700 இந்திய ரூபா அறவிடப்படுகின்றது. அதனை நாம் 8500 இந்திய ரூபாவாக மாற்றியமைப்பதோடு பத்து கிலோகிராம் எடையுடைய பொதியையும் இலவசமாகக் கொண்டுவர முடியும்.

மேலதிகமாக அதிக எடையுடைய பொதிகளை கொண்டு செல்வதாக இருந்தால் அதற்கான மேலதிக கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான தொகைகள் எமது உத்தியோகபூர்வமான இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணப்பொதிகளுக்கான முற்பதிவுகளை இணையத்தின் ஊடாக மட்டுமே மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (ஙி-8-33)

# போலித் தகைமையுடன் 7 உறுப்பினர்கள்

## பதவி விலகுமாறு மொட்டுக் கட்சி போர்க்கொடி



(கொழும்பு)

போலியான கல்வித் தகைமையை சமர்ப்பித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு பதவிகளில் இருந்து விலக வேண்டும்.

கலாநிதி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்ட அசோக ரன்வல பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தை சிரமதானம் செய்ய வேண்டும், படித்தவர்களால் பாராளுமன்றம் நிரப்பப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

நாட்டு மக்களும் தேசிய மக்கள் சக்திக்கு 159 ஆசனங்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள்.

இல்லாத கலாநிதி பட்டத்தை இருப்பதாக குறிப்பிட்டுக் கொண்டே தேசிய மக்கள் சக்தி சார்பில் அசோக ரன்வல கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டார். அவ்வாறாயின் அசோக ரன்வல கம்பஹா மாவட்ட மக்களையும் ஏமாற்றியுள்ளார்.

மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய காரணத்தால் தான் அசோக ரன்வல சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தார்.

பொய்யான கல்வித் தகைமையை குறிப்பிட்ட அசோக ரன்வலவுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? அசோக ரன்வல பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

போலியான கல்வித் தகைமையை சமர்ப்பித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு பதவிகளில் இருந்து விலக வேண்டும் எனத் தெரிவித்தார். (ஙி-8)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 - இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 8 இல் செவ்.<br>கி.பா : 36 1/4<br>உயரம் : 5' 2"<br>தகைமை/தொழில்: Degree Management DO.<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15008 | பிறப்பு-1994 - இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>கி.பா: 36 3/4<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, படித்த தகுதியான பெண்.<br>தொ.இ: G/15007 |
| பிறப்பு: 1986 - இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: Business (London) Transport.<br>எதிர்பார்ப்பு - தகுதியான பெண்<br>தொ.இ: B/15009 | பிறப்பு -1999 - இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1 இல் செவ்<br>கி.பா: 24<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில் - A/L, தையல்.<br>எதிர்பார்ப்பு - வெளிநாடு<br>தொ.இ: G/15010 |
| பிறப்பு:1995 - இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா- 17 1/2<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்: NDT Civil, Technical Officer.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15011 | பிறப்பு-1998 - இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கிபா-18<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: Bsc, Software Engineer.<br>எதிர்பார்ப்பு - Degree, உயர்பதவி<br>தொ.இ: G/15012 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இருதலையுடன் இருக்கும் வித்தியாசமான உயிரினம்



இருதலையுடன் இருக்கும் ஒரு உயிரினம் பற்றிய தகவல் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இயற்கையில் காணப்படும் சில அதிசயமான விடயங்கள் நமக்கு வியப்பாக இருக்கும்.

பொதுவாக மனிதர்களால் அறிவு குறைவாக கருதப்படும் விலங்குகள் பறவைகள் செய்யும் சாகசங்கள் ஏராளம்.

இது நமக்கு புதிதானவையாகவும் இருக்கலாம். இந்த காரணத்தினால் தான் மனிதர்களுக்கு இயற்கையின் மீது எப்போதும் ஆர்வம் அதிகம்.

அப்படி தான் தற்போது ஒரு விலங்கு பற்றிய தகவல் இணையத்தை ஆக்கிரமித்துள்ளது.

பொதுவாக விலங்குகள் பூச்சி சாப்பிடுவது வழக்கம். அந்த வகையில் Buiten gebiden என்ற டுவிட்டர் கணக்கு மூலம் ஒரு வீடியோ வெளியிடப்பட்டது. வீடியோவில், ஒரு விசித்திரமான ராட்சத விலங்கு பூச்சிகளை சாப்பிடுவது போல காணப்படுகின்றது.

இது சாதாரண ஒரு விலங்காக இருந்தாலும் இதற்கு இரண்டு தலை இருப்பதே அதிசயம்.

இந்த விலங்கின் பெயர் Anteater (எறும்பு உண்ணி). இது எறும்பு தின்னும் உயிரினம்.

இது இரண்டு தலையுடனும் உணவை உண்ணும் வீடியோ தான் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது. (நி-8)

# தென்கொரிய

## யூன் சுக் இயோலி

(சியோல்)

**தென் கொரியாவில் இராணுவ சட்டத்தை பிரக**
**இயோலை பதவிநீக்க வலியுறுத்தி, அந்நாட்டு பா**
**செய்யப்பட்ட தீர்மானம் வெற்றி பெற்றது. இை**
**நீக்கம் செய்யப்பட்டார்.**

கிழக்கு ஆசிய நாடான தென்கொரியாவில், அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் மசோதா தொடர்பாக ஆளும் மக்கள் சக்தி கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதையடுத்து அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த யூன் சுக் இயோல், 63 அவசரநிலை இராணுவ சட்டத்தை சமீபத்தில் அமுல்படுத்தினார்.

இதற்கு எதிர்க்கட்சிகளும், ஆளுங் கட்சியில் சில எம்.பிக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து, பாராளுமன்றம் உடனடியாக கூட்டப்பட்டு, அவசர நிலையை நீக்க தீர்மானம் நிறைவேற்றியது.

இதனால் சில மணி நேரங்களில் அவசரநிலை அறிவிப்பை யூன் சுக் இயோல் திரும்பப் பெற்றார். அவர் பதவி விலக வலியுறுத்தி நாட்டின் பல பகுதிகளில் மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

இதற்கிடையே ஜனாதிபதிப் பதவியில் இருந்து யூன் சுக் இயோலை நீக்க வலியுறுத்தி, அந்நாட்டு பாராளுமன்றில் கடந்த வாரம் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. மொத்தம் 300 எம்.பிக்கள் உடைய பாராளுமன்றில், தீர்மானம் வெற்றி பெற, 200 பேரின் ஆதரவு தேவை.

இதற்கு எதிர்க்கட்சிகளின் 192 எம்.பிக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்ததால், தீர்மானம் தோல்வி அடைந்தது. எனினும் பல்வேறு இடங்களில் யூன் சுக் இயோலுக்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ஜனாதிபதிப் பதவியில் இருந்து யூன் சுக் இயோலை நீக்க வலியுறுத்தி, பாராளுமன்றில் நேற்று முன்தினம் மீண்டும் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது.

அப்போது தீர்மானத்துக்கு ஆதரவாக, 204 எம்.பிக்கள் வாக்களித்த நிலையில், 85 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

எட்டு வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டன. இதையடுத்து, யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் பலம் 192 ஆக

# போராட்டத்தை முன்னெடுத்த விவசாயிகள் மீது புகைக்குண்டு வீச்சு!

## பஞ்சாப்–அரியானா இடையே பதற்றம்



(டில்லி)

வேளான் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு சட்டப்பூர்வமாக உறுதி செய்யவேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானாவைச் சேர்ந்த விவசாயிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பஞ்சாப், அரியானா மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள் டில்லி நோக்கி பேரணியாக சென்றனர். சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்டோர் மோர்ச்சா ஆகிய விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் நூற்றுக்கணக்கானோர் அரியானா வழியாக டில்லி செல்ல முயற்சித்தனர்.

அவர்களை பஞ்சாப், அரியானா இடையே உள்ள ஷம்பு எல்லையில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது, பொலிஸாருக்கும், விவசாயிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதையடுத்து, டில்லி நோக்கி பேரணியாக செல்ல முயன்ற விவசாயிகளை தடியடி நடத்தியும் கண்ணீர் புகைகுண்டு வீசியும் தண்ணீர் பிரயோகம் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ய ஜனாதிபதி
# ...லின் பதவி பறிப்பு!

...பிரகடனம் செய்த யூன் சுக்
...டு பாராளுமன்றில் தாக்கல்
...இதையடுத்து அவர் பதவி



உள்ள நிலையில், சில ஆளுங்கட்சி எம்.பிக்களும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால், ஜனாதிபதிப் பதவியில் இருந்து யூன் சுக் இயோல் விலகும் நிலை ஏற்பட்டது.

பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து ஜனாதிபதிப் பதவியில் இருந்து கடமையாற்ற யூன் சுக் இயோலுக்கு தடை விதிக்கப்பட்டு, அவரது அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

இதையடுத்து பிரதமர் ஹான் டக் -சூ இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். யூன் சுக் இயோலின் பதவி நீக்கத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக, 180 நாட்களுக்குள் தென்கொரியாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் முடிவு செய்யும்.


அவருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்தால், தென் கொரிய வரலாற்றில் பதவி நீக்கம் செய்யப்பட்ட இரண்டாவது ஜனாதிபதி என்ற பெயரை யூன் சுக் இயோல் பெறுவார்.

இதைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதியை தேர்வு செய்ய, 60 நாட்களுக்குள் தேர்தல் நடக்கும்.

யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டதை, தென்கொரிய மக்கள் வீதிகளில் கூடி கொண்டாடினர். (நி-8)

## திருவிழாவில் அசம்பாவிதம்
## மூவர் உயிரிழப்பு, 50 பேர் படுகாயம்

### தாய்லாந்தில் துயரம்



(தாய்பே)

தாய்லாந்தில் திருவிழா கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட குண்டு வெடிப்பில் சிக்கி 3 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தாய்லாந்து - தக் மாகாணத்தில் உள்ள உம்பாங் நகரில் வருடாந்திர திருவிழா நடைபெற்றது.

அப்போது விழாவில் கலந்து கொண்ட இருதரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதனால் கோபமடைந்த சிலர் அந்த கூட்டத்தை நோக்கி வெடிகுண்டு வீசியுள்ளனர்.

வெடிகுண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதால் அங்கிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடியுள்ளனர்.

இச்சம்பவத்தில் 3 பேர் உடல் சிதறி பலியாகினர்.


மேலும் இச்சம்பவத்தில் 50 இற்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது.

அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.


இதற்கிடையே இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் 2 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். (நி-8)

கொண்டும் பொலிஸார் விரட்டியடித்தனர். இதனால், ஷம்பு எல்லையில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

முன்னதாக விவசாயிகள் கடந்த 6 மற்றும் 8 ஆம் திகதிகளில் டில்லி நோக்கி பேரணியாக செல்ல முயற்சித்தனர். அப்போது, அவர்கள் அரியானா எல்லையில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)



## ரஷ்யாவின் எண்ணெய் நிலையங்களை
# தாக்கி அழித்த உக்ரைன்



(மொஸ்கோ)

ரஷ்ய துருப்புக்களுக்கு எரிபொருள் விநியோகத்தின் முக்கிய ஆதாரமாக இருக்கும் எண்ணெய் நிலையத்தை ட்ரோன்கள் மூலம் உக்ரைன் தாக்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் ஓரியோல் பிராந்தியத்தில் உள்ள Steel Horse எனப்படும் எண்ணெய் உற்பத்தி கட்டுப்பாட்டு நிலையத்தை குறிவைத்து உக்ரைனிய ஆளில்லா விமானங்கள் நள்ளிரவில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த எண்ணெய் நிலையம் உக்ரைன் எல்லையிலிருந்து சுமார் 170 கிமீ தொலைவிலுள்ளது இந்த தாக்குதலில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டாலும் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என ரஷ்யாவின் ஓரியோல் மாகாண ஆளுநர் ஆண்ட்ரே கிளிச்கோ தெரிவித்துள்ளார்.

தாக்குதலின் போது 11 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன், உக்ரைன் ட்ரோன்கள் ரஷ்ய எண்ணெய் வசதிகளை அடிக்கடி இலக்கு வைப்பது இந்த தாக்குதலின் மூலம் தெளிவாகிறது.

இதனை உக்ரைன் அதன் இராணுவ இலக்காக கருதுகிறது ஆனால் ரஷ்யா இதைப் தீவிரவாத செயல்கள் என வகைப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து உக்ரைனின் இராணுவ நடவடிக்கைகள் ரஷ்யாவின் எண்ணெய் நிலையங்களை தாக்கும் நோக்குடன் அதிகரித்துள்ளன குறிப்பாக ரஷ்யாவின் குர்ச்க் பகுதியில் உள்ள சில கிராமங்கள் தற்போது உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த தாக்குதலால் ரஷ்யாவின் எண்ணெய் விநியோகத்தில் தாக்கம் ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி, பிள்ளையுடன் சென்ற இளம் தந்தை கொலை

## மர்ம நபர்கள் வெறியாட்டம்

(கொழும்பு)

மீகொட. நாகஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு காரில் பயணித்த நபர் ஒருவர் இனந்தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது சகோதரரின் வீட்டில் இருந்து மீகொட நாகஹவத்த பிரதேசத்தில் உள்ள தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் காரை நிறுத்தியதாகவும் மேலும் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நபர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடந்த போது, இறந்தவரின் ஒன்றரை வயது மகளும் மனைவியும் காரில் இருந்துள்ளதுடன், உயிரிழந்தவர் பத்தரமுல்லை செத்சிரிபாயவில் உள்ள சமுர்த்தி மானிய அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றி வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், நுகேகொட குற்றப்பிரிவு அதிகாரிகள் சம்பவ இடத்தில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# சந்தோஷ் ஜா-பிமல் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையுடனான வலுவான மற்றும் நீண்டகால உறவுகளைப் பேணுவதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இதன்போது தெரிவித்துள்ளார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 750 | 500 | 700 | 600-700 |
| உருளைக்கிழங்கு | 240 | 300 | 280 | 280 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1000-1300 |
| தக்காளி | 400 | 500 | 300 | 250-300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 240 | 150-200 |
| கோவா | 350 | 350 | 250 | 250 |
| கரட் | 200 | 300 | 250 | 250 |
| பூசணி | 140 | 150 | 200 | 150 |
| புடோல் | 300 | 400 | 300 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 70-100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 250 | 320 |
| பாகற்காய் | 1500 | 1400 | 1000 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 150-200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 130 |
| பயற்றங்காய் | 800 | 800 | 600 | 700-800 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 400 | 200 | 300 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 600-700 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 | -- |
| போஞ்சி | 600 | 300 | 500 | 550 |
| கத்தரிதம்புள்ள | 700 | 400 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 150 | 150-200 |
| தேசிக்காய் | 600 | 550 | 500 | 350-450 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-160 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 730 |
| வெங்காயப்பூ | -- | 900 | 500 | -- |
| முள்ளங்கி | 250 | 300 | 300 | 100 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 80 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 284



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## தூக்கம் வரவில்லையா?

உலகத்தில் எது எதுக்கோ எல்லாம் ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன அல்லவா? அது மாதிரி தூக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு ஆராய்ச்சி கூடம் இருக்கின்றது சேர்.

அப்படி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றால் அதற்கு முழித்துக் கொண்டு இருக்க வேண்டும் அல்லவா? அதனாலே அந்த ஆராய்ச்சிக் கூடம் இங்கே இல்லை!

அமெரிக்காவில் பாஸ்டன் பல்கலைக்கழக மருத்துவமனையிலே அது உள்ளது.அங்கே தூக்கத்தைப் பற்றி பல விதமான ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஆராய்ச்சிக் கூடத்திலே இயக்குநராக இருக்கின்ற ஒரு நிபுணர் (சான்போர்ட் ஆவர்பாக்) என்ன சொல்கிறார் தெரியுமா?

உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா? நீங்கள் நல்லா தூங்குவதற்கு தாராளமாக சில யோசனைகளை என்னாலே சொல்ல முடியும் என்கிறார்.

யோசனை தானே! காசா பணமா? கேட்டு வைத்துக் கொள்ளுவோமே!

உணவு, மனநிலை, தூங்கும் இடத்தின் சூழ்நிலை, படுக்கைக்குச் செல்லும் போது உள்ள பழக்கவழக்கங்கள் இதன் காரணமாக ஒருவருக்கு தூக்கம் வராமல் போகலாம். தூக்கம் வராததற்கு இதுதான் காரணம் என்றால் அதையெல்லாம் சுலபமாக கட்டுப்படுத்தலாம் என்கிறார் அவர்.

தூக்கத்தை வரவழைக்கக் கூடிய ஒரு நல்ல மருந்து உடற்பயிற்சி! உடலை அயர்ச்சியுற வைக்கிற உடற்பயிற்சி தூக்கத்தை வரவழைக்கும். ஆனால் ஒன்று. படுக்கப் போகின்ற நேரத்தில் இது மாதிரி உடற்பயிற்சிகளை செய்யக் கூடாது. கொஞ்சம் முன்னாலே பகலிலேயே இந்தப் பயிற்சிகளைச் செய்வது நல்லது.

தூக்கம் வராமல் அவதிப்படுகிறவர்கள். பிற்பகல் நேரங்களில் கோப்பி, டீ இதுமாதிரி பானங்களை சாப்பிடக்கூடாது. மது அருந்துவது கூட தூக்கத்தைப் பாதிக்கும்.

வெதுவெதுப்பான நீரிலே குளிப்பது, தியானத்திலே ஈடுபடுவது, ஓய்வாக இருப்பது, தூங்குவதற்கு முன்னால் ஒரு குவளை பால் சாப்பிடுவது இதெல்லாம் தூக்கத்தை வரவழைப்பதற்கு ரொம்ப உதவியாக இருக்கும்.

இன்னொரு விடயம். தூங்கியாக வேண்டும் என்கிற கவலை வேண்டாம். அப்படி நினைத்து கவலைப்படுவதை விட்டு விடுங்கள்.

தூக்கம் வரவில்லையா? உடனே படுக்கையை விட்டு எழுந்திடுங்கள். கொஞ்சம் நேரம் உலாவுங்கள். அல்லது ஏதாவது புத்தகம் படியுங்கள். களைப்பு ஏற்பட்டால் மறுபடியும் படுக்கைக்கு போங்கள். தூக்கம் தானாக வரும்.

ஒரு விடயத்தை மட்டும் நன்றாக ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள். படுக்கைக்குப் போகும் போது உங்களுடைய மற்றைய எல்லாப் பிரச்சினைகளையும் மறந்துவிடுங்கள். அது எப்படி சேர் முடியும்? அந்த நேரம் தானே எல்லா பிரச்சினைகளும் வரிசையாக ஞாபகம் வருகின்றது என்று நாங்கள் நினைக்கலாம்.

ஆனால் பழக்கத்திலே அதை நாம் மாற்றிக் கொள்ள முடியும். கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும். அவ்வளவு தான்!

இது எல்லாமே ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு அந்த நிபுணர் சொல்லும் கருத்துத்தான்.

இன்னொரு விடயமும் அவர் சொல்கிறார். அது என்னவென்றால் உடல் கோளாறு காரணமாக தூக்கம் வராமல் அவதிப்படுகின்றவர்களுக்கெல்லாம் இந்த யோசனைகள் சரியாக வராது என்கிறார் அவர். அதற்கெல்லாம் மருத்துவ சிகிச்சை கொடுத்துத்தான் சரி செய்ய வேண்டும்.

சில பேருக்கு நடுராத்திரியிலே மூச்சுத் திணறல் ஏற்பட்டு தூக்கம் வராமல் போகும். ஊரெல்லாம் தூங்கும் போது தான் மட்டும் தூங்காமல் முழித்துக் கொண்டு இருப்பது. ஊரெல்லாம் முழித்துக் கொண்டிருக்கும் போது தான் மட்டும் தூங்குவது இதுமாதிரி கோளாறுகளாலே சில பேர் பாதிக்கப்படலாம்.

கால் தசை முறுக்கிக் கொள்வதனாலே சில பேருக்கு அடிக்கடி விழிப்பு வரலாம். மனஅழற்சி காரணமாக சில பேருக்குத் தூக்கம் வராது. இது மாதிரி கோளாறுகளுக்கெல்லாம் அது அதுக்குத் தகுந்த மாதிரி சிகிச்சை கொடுத்துத் தான் சரி செய்ய வேண்டியிருக்கும்.

எந்தக் கோளாறுகளும் இல்லாமல் தூக்கம் வரவில்லை என்றால் ஆரம்பத்திலே சொன்ன முறைகளை கடைபிடித்துப் பார்க்கலாம். தூக்கம் வந்தது என்றால் யோசனை சொன்ன அந்த நிபுணருக்கு நன்றி சொல்லலாம்.

ஒருவர் ஏன் சேர் பஸ்ஸிலே தூங்குவது கெட்டப் பழக்கமா என்று கேட்டார். இல்லையே! நான் கூட பஸ்ஸிலே போகும் போது தூங்கிக் கொண்டு தானே போவேன் என்றார் இன்னொருத்தர்.

அப்புறம் என்னை டிரைவர் வேலையெல்லாம் வேண்டாம் என்று வீட்டுக்கு அனுப்பி கொண்டார்கள் அப்படி என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை வானில் சென்ற கும்பல் தாக்குதல்-குடும்பஸ்தர் படுகாயம்


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று பிரதேசத்தில் வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வெள்ளை வானில் சென்றவர்கள் தாக்குதல் நடத்தியதில் பாதிக்கப்பட்ட நபர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழில் இருந்து வெள்ளை வானில் சென்ற கும்பல் ஒன்று முல்லைத்தீவு பொலிஸ் என கூறி குறித்த குடும்பஸ்தரை அவரது வீட்டிற்குள் அழைத்து சென்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இச் சம்பவத்தில் ஊற்றங்கரை வீதி தண்ணீரூற்று முள்ளியவளையினை சேர்ந்த 44 வயதுடைய கோபால கிருஸ்ணன் கஜறூபன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8-299)

# எலிக்காய்ச்சல் தொடர்பில் முல்லையில் விழிப்புணர்வு




(முல்லைத்தீவு)

தற்போது சடுதியாக அதிகரித்துவரும் எலிகாய்ச்சல் நோயினால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அதனைத் தடுக்கும் நோக்கில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிராந்திய பணிமனையினால் நேற்று விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (நி-8-299)



வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாணம், மாவட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் சாதனைகளை நிலைநிறுத்திய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



கிளிநொச்சி மாவட்ட கலைஞர்கள் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மாவட்டத்திலுள்ள கலைஞர்கள் பலர் கலந்து கொண்டு கலைஞர்கள் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்ததுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. (படம்:-தேவானந்தன்)

# சுற்றிவளைப்பில் சிக்கிய 300 வர்த்தகர்கள்

(கொழும்பு)

அரிசி விலைக் கட்டுப்பாடு தொடர்பான சோதனை நடவடிக்கைகளால், இதுவரை 300 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் சட்டத்தின் கீழ் சிக்கியுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் இதுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் பிடிபட்டதாக அந்த அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

அவர்களுக்கு எதிரான வழக்கு தாக்கல் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3276

Search for people, places and things

### சுவே

அனுமதி கேட்கவும் இல்லை
அனுமதி வழங்கவும் இல்லை
ஆனால்
பிழவாதமாக ஒரு முத்தம்
கன்னத்தில் கொசுக்கடி

இப்படிக்கு
கொசுக்கடியில் புரண்டு புரண்டு
படுத்து யோசிப்போர் சங்கம்

### ஆகாஸ்




### சுலோஜன்




### புஸ்பா




### அபிஷன்




### சத்தியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 657





அந்தக் குதிரை நின்ற இடம் ஒரு அகன்ற வாய்க் காலின் கரை. அந்த மேட் டுக்கரையிலிருந்து குதிரை வாய்க்காலின் வெள்ளத்தில் பாய்ந்தது. தீவர்த்தி பிடித்த மனிதன் "மகாராஜா! மகா ராஜா!" என்று கூறிக் கொண்டே குதிரையைப் பின் தொடர்ந்து வாய்க் காலில் குதித்தான். குதித்த வன் இடறி விழுந்தான். தீவர்த்தி வாய்க்காலின் வெள்ளத்தில் அமிழ்ந்தது.

மறுகணம் முன்னைவி டப் பன் மடங்கு கனாந் தகாரம் சூழ்ந்தது. அதே சமயத்தில் இலேசாகத் தூற றல் போடத் தொடங்கியது. காற்றினால் மரங்கள் ஆடிய சத்தத்துக்கும், மழைத் தூற லின் சத்தத்துக்கும், மண்டூக ளின் வறட்டுக் கத்தல்களுக் கும் இடையே மனிதர்களின் அபயக் குரல்களும், குதிரை களின் காலடிச் சத்தமும் குழப் பமாகக் கேட்டன. இளவர சர் மதுராந்தகர் அவ்வள வாகத் தைரியத்துக்குப் பெயர் போன மனிதர் அல்ல என் பதை வந்தியத்தேவன் அறிந் திருந்தான்.

மிரண்ட குதிரையின் மேலி ருந்த மதுராந்தகருக்கு என்ன ஆபத்து விளையுமோ என்று அவன் உள்ளம் திடுக்கிட் டது. குதிரை அவரைச் சுமந்து கொண்டே தெறிகெட்டு ஓடி னாலும் ஓடலாம். அல்லது அவரை வாய்க்கால் வெள் ளத்திலேயே தள்ளியிருந்தா லும் தள்ளியிருக்கலாம். அல் லது சற்றுத் தூரம் அவரைச் சுமந்து கொண்டு சென்று, வேறு எங்காவது தள்ளி விட் டுப் போயிருக்கவும் கூடும்.

தீவர்த்தியுடன் வந்த மனி தனால் குதிரையைத் தொடர் ந்து போய் அவரைக் காப் பாற்ற முடியுமா? அவனே தான் வாய்க்கால் வெள்ளத் தில் தடுமாறி விழுந்து விட் டானே? அச்சமயம் தான் செய்ய வேண்டியது என்ன? வானதியைத் தேடிப் போவதா? மதுராந்தகரின் உதவிக்குச் செல்லுவதா என்ற போராட் டம் ஒரு நிமிடம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது.


வானதி தேவி போன இடமே தெரியவில்லை. ஆனால் மது ராந்தகர் தன் கண் முன்னால் ஆபத்துக்கு உள்ளானார். அவ ருக்கு உதவி செய்வது எளிது. அவரைத் தேடிப் பிடித்து அபாயம் ஒன்று மில்லை என்று கண்டார். பிறகு வானதியைத் தேடிப் போவது இருக்கவே இருக்கிறது! கடவுளே! சம் பந்தமில்லாத வேறு எந்தக் காரியத்திலும் தலையிடு வதில்லை என்று தான் சற்று முன்னால் தீர் மானித்துக் கொண்டு கிளம் பியது என்ன? இப்போது நடப்பது என்ன?

மண்டபச் சுவரின் மறை விலிருந்து குதிரையை வெளி யில் கொண்டு வந்தான் வந் தியத்தேவன். இருட்டிலும் தூறலிலும் உள்ளுணர்ச்சி யினால் வழி கண்டுபிடித்து வாய்க்காலில் இளவரசரின் குதிரை இறங்கிய இடத்தை நோக்கிச் சென்றான். வாய்க் காலில் அவனும் இறங்கி னான். சுற்றும் முற்றும் நன் றாகப் பார்த்தான், ஒன்றும் தென்படவில்லை. எங்கேயோ தூரத்தில், "ஆஆஆ!" "ஓஓஓ!" "ஈஈஈ!" "டடபடா டட படா" "கடகட கடகடா!" என்பவை போன்ற விவரம் தெரியாத சத்தங்கள் கேட் டன.

வாய்க்காலின் அக்கரை யில் ஏறினான். கரை மேட் டுக்கு அப்பால் உற்றுப் பார்த் தான். நெடுகிலும் நெல் வயல்களாகக் காணப்பட் டன. வயல்களில் சேற்றி லும் பச்சைப் பயிரிலும் குதிரையை நடத்திச் செல் வது இயலாத காரியம். கரை யோடு போய்த்தான் தேடிப் பார்க்க வேண்டும்.


வாய்க்காலின் கரையிலோ, செடி கொடிகளும் முட்பு தர்களும் அடர்ந்திருந்தன. அவற்றின் நடுவே சென்ற குறுகிய ஒற்றையடிப் பாதை வழியாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென் றான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மரமும் மனிதனும்



ஓர் ஊரில் ஒரு மனி தன் இருந்தான். அவ னுக்கு உள்ளூரில் வேலை கிடைக்க வில்லை. அதனால், அருகில் உள்ள ஊருக்கு வேலை தேடிச் சென் றான். கட்டுச் சோற்று மூட்டையுடன் புறப்பட் டான். அருகில் உள்ள ஊருக்குச் சென்று அவன் பிற்பகல் முழுவதும் வேலை தேடியும் அவ னுக்கு வேலை கிடைக்க வில்லை. மனச் சோர்வு டன் தன் ஊருக்குத் திரும்பினான்.

திரும்பி வரும் வழி யில் வெயில் கொளுத் தியது. அவனுக்குக் களைப் பாக இருந்தது. பசியெ டுத்தது. எங்கே யாவது நிழல் கிடைக்குமா என்று தேடினான். சிறிது தூரத் தில் ஒரு பூவரசு மரம் இருந்தது. நேராக அந்தப் பூவரசு மரத்தை நோக்கி நடந்தான். அதன் அடி நிழலில் உட்கார்ந்தான். கட்டுச் சோற்று மூட் டையை அவிழ்த்து வயி றாரச் சோறு உண்டான். பிறகு கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு அங் கேயே படுத்து விட்டான்.

மரத்தின் அடியில் படுத்திருக்கும் போது அவனுக்கு ஓர் எண்ணம் பிறந்தது. எங்கு தேடியும் வேலை கிடைக்கவில்லை. இந்த மரத்தை வெட்டி விற காக விற்றால் பணம் கிடைக்குமே என்று அவன் எண்ணினான். உடனே தன் ஊருக்குப் புறப்பட் டுச் சென்றான். ஒருவ ரிடம் கோடரி வாங்கிக் கொண்டு வந்தான். அடுத்து பூவரசு மரத்தின் கிளை கள் சிலவற்றை வெட்டி னான். ஊரினுள் சென்று விற்றான். மறுநாளும் வந்து வேறு சில கிளை களை வெட்டினான்.

மரத்தை வெட்டிக் கொண்டிருக்கும்போதே வெயில் உச்சிக்கேறி யது. அவன் சிறிது நேரம் தன் வேலையை நிறுத்தி விட்டு, மிகுந்திருந்த கிளைகளின் கீழே நிழ லில் உட்கார்ந்து சாப்பிட் டான். பிறகு தூங்கினான். மறுபடியும் எழுந்து கிளை களை வெட்டினான்.

இப்படி ஐந்தாறு நாட் கள் அதன் நிழலிலேயே படுத்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் அதன் கிளைகளை வெட்டி னான். ஒரு வாரத்தில் மரம் முழுவதும் வெட்டி விற்று முடிந்தது.

ஒரு வாரத்திற்குப் பின் மீண்டும் அவன் வேலை தேடிப் பக் கத்து ஊருக்குச் சென் றான். வேலை கிடைக் கவில்லை. சோர்வுடன் திரும்பி வந்தான். வெயில் கொளுத்தியது. ஆனால் களைப்பாற உட்காருவதற்கு நிழல் இல்லை. அந்த மரம் இருந்த இடத்திற்கு வந் தான்.

வெட்டித் தீர்க்கும் வரை தனக்கு அந்தப் பூவரசு மரம் நிழல் தந் தமையை நினைத்தான். ஏழு நாள் பிழைப்புக் காகத் தான் செய்த தீமையை எண்ணி வருந் தினான்.

கருத்துரை : நல்லறி வுடைய பெருமக்கள் தாம் சாகுமட்டும் தமக் குத் தீமை செய்துவரு வோர்க்கும் தம்மாலான வரை அந்தத் தீயவர் களையும் காப்பாற்றவே செயலாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரிடம் எதிர்பார்ப்பதைத் தவிர்த்து எனது வாழ்விற்கு நானே பொறுப்பு என உணருங்கள்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உங்களின் சுகபோகத்திற்காக நாட்டைக் கருவறுக்காதீர்கள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்புக்கும் ஏனைய உதவிகளுக்குமென 60 பொலிஸார் உட்பட பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 231 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்ற தகவலை அறியும்போது ஏங்காதார் இருக்க முடியாது.

ஆம், ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அதிலும் இந்த நாட்டின் ஆட்சிப்பீடத்தில் இருந்து மக்களால் துரத்தப்பட்ட ஒருவருக்கு படைத் தரப்பைச் சேர்ந்த 231 பேர் பாதுகாப்புக்கும் சேவகத்துக்குமாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனும்போது அவர்களுக்கான சம்பளம், அவர்களின் மனித உழைப்பு என்பன எங்ஙனம் வீணடிக்கப்படுகின்றதென்பதை உணர முடியும்.

ஆம், நாடு கந்தறுந்து கிடக்கிறது. ஒருபுறம் கடன் சுமை, மறுபுறம் அன்றாட சீவனோபாயத்துக்காக அல்லாடும் ஏழை மக்கள். இதைவிட வேலையற்ற இளம் சமூகம். தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு முதலிட முடியாத நாட்டின் பொருளாதார அவலம்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது, முன்னாள் ஜனாதிபதிக்கு மாதாந்தம் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவிடுவதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

இருந்தும் அப்பெரும் செலவைக் கடந்த கால ஆட்சியாளர்கள் செய்து வந்துள்ளனர்.

இப்போது ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் அதுபற்றி மீள் பரிசீலனை செய்ய முற்படும்போது அதற்கான எதிர்ப்புகளும் வெளிக்கிளம்புவதைக் காண முடிகிறது.

விடுதலைப் புலிகளைப் போரில் வென்றுவிட்டேன் என்று மார்தட்டிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ; விடுதலைப் புலிகளிடம் இருந்து இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தேன் எனத் துள்ளிக் குதித்தார்.

கூடவே பூல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைப் போரில் கொன்று குவித்துவிட்டு, காலிமுகத்திடலில் வெற்றி விழாக் கொண்டாடியவர். அத்தகைய ஒருவருக்கு இனி யாரால் அச்சுறுத்தல் ஏற்படப் போகிறது.

ஆம், இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு படைத் தரப்பைச் சேர்ந்த 231 பேர் பாதுகாப்பு வழங்கும் அளவுக்கு இந்த நாட்டில் என்ன குழப்பம் இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை.

ஆக, ஆட்சித் தலைவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட அதீதமான சலுகைகளும் சுகபோக வாழ்க்கையும் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிட்டன.

ஆக, இலங்கையின் பொருளாதாரம் உயர்வடைய வேண்டுமாயின், முதலீடுகளை மேற்கொள்வதும் தேவையற்ற அரச செலவுகளைச் சிக்கனப்படுத்துவதும் மிகவும் அவசியமாகும்.

அந்தவகையில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு, ஓய்வு காலத்தை நெருங்கக்கூடிய இரண்டு பொலிஸார் போதுமானதாகும்.

ஏனைய அனைத்துப் படையினரையும் உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.

உண்மை. சிறையில் இருக்க வேண்டியவர்களுக்கு இத்துணை பாதுகாப்பு வசதிகளை வழங்குகின்ற ஒரு நாடு எப்படி உய்ய முடியும்.

ஆகையால் அரச செலவுகளைக் கணிசமாகக் குறைப்பது அவசியம். அதை உடனடியாகச் செய்தாக வேண்டும்.

# மீனவர்கள் நேரில் சந்தித்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்

## இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி

(முல்லைத்தீவு)

இலங்கை - இந்திய மீனவர்களின் சந்திப்பு இதுவரை இடம்பெறவில்லை. அது இடம்பெறுமாயின் மீனவர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வு காணமுடியும் என யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பங்களிப்புடன் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு முள்ளியவளையில் நத்தார் பெருவிழா இடம் பெற்றிருந்தது. நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மிஸ்பா ஜெப மிஷனரி ஆலய மாணவர்களுக்கு இந்திய மக்கள் சார்பாக கலந்து கொண்டு உதவித் திட்டங்களை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்களில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு ஆதரவாக மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் சம்பந்தமான திட்டங்களும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்றையதினம் (நேற்று) இலங்கை ஜனாதிபதி இந்தியா பயணிக்கின்றார். அங்கு தங்கியிருந்து இலங்கை சம்பந்தமான பல திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை எதிர்பார்க்கலாம். அதில் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் சேர்ந்த பல திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருக்கின்ற அனைவரோடும் மாணவர்கள், இளைஞர்கள், இங்கே இருக்கின்ற மக்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கனவே குறிப்பிட்டது போல இது ஒரு ஆரம்பம் தான். எதிர்காலத்தில் பல விடயங்களோடு சேர்ந்து பயணிப்போம்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் பெரியளவிலான கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அதில் இலங்கை அதிகாரிகள் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் மீனவர்கள் நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது இடம்பெறுமாயின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றார். (ந-7,299)

## சீனப் பெண் தலைமையில் பாரிய இணைய மோசடி

(கொழும்பு)

சீனப் பெண் ஒருவரால் நடத்தப்பட்ட பெரிய அளவிலான இணைய பண மோசடியின் உண்மைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நீதிமன்றில் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

இணையக் கணக்குகள் மூலம் இப் பெரியளவிலான மோசடி இடம் பெற்றுள்ளது.

இணையக் கணக்குகள் மூலம் பணத்தை மோசடி செய்த சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு சீனப் பிரஜைகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இது தெரியவந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பெரியளவில் பணத்தை ஏமாற்றிய சீன நாட்டு ஆட்கடத்தல் கும்பலின் கணக்குகளில் 1500 மில்லியன் ரூபா பணம் புழக்கத்தில் இருந்ததாகக் குற்றப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. (ந-7)

## யாழில் திருட்டுக் கும்பல் தகவல் தாருங்கள்

### பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்ப் பகுதிகளை அண்மித்துள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் திருடும் கும்பல்கள் தொடர்பான தகவல் கிடைத்தால் அறியத் தருமாறு பொலிஸார் பல்பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அண்மையில் பல்பொருள் விற்பனை நிலையங்களுக்கு மூவர் அடங்கிய கும்பல் சென்று,

அங்கு பொருட்களை வாங்குவது போல சில பொருட்களைத் திருடி, தமது ஆடைகளுக்குள் மறைத்து எடுத்துச் சென்றமை தொடர்பான காட்சிகள் விற்பனை நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ளன.

இக் கும்பல் தொடர்ச்சியாக இது போன்ற திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதனால், அவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்தால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (ந-7)

## உருவாகியது அடுத்த தாழ்வு மண்டலம்

### வெளுத்து வாங்கப் போகும் மழை

தென்கிழக்கு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேலும் அந்தத் தாழமுக்கமானது மெதுவாக உருவாகி மேற்கு, வடமேற்கு நோக்கி நகர்ந்து, அடுத்த 2 நாட்களுக்கு வடக்கே தமிழகக் கடற்கரையை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும், ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளை [illegible] லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும்.

அதேவேளை மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் மழையுடன் கூடிய பலத்த காற்று மற்றும் இடி, மின்னல் அபாயத்தைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ந-7)

## கசிப்புடன் ஒருவர் கைது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தைப் பகுதியில் கசிப்புடன் நபர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 1.5 லீட்டர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் உளுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு (14) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 38 ஆவது மைல் கல் பகுதி, மஹபுளங்குளம் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய இரு பிள்ளையின் தந்தை என்பது விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவருடைய சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.


சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஓமம்

**Botanical name-Carumcopticum**
**Family-Umbelliferae**





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மென்மையான ரோமங்களைக் கொண்ட செடியாகும். வெள்ளை நிறப்பூக்கள். கோள வடிவப் பழங்கள் சிறிதாகக் காணப்படும். இதற்கு ஒருவித மணமுமுண்டு.

8 ஆயிரம் முதல் 11 ஆயிரம் அடி உயரமுள்ள பாகங்களில் தானாக வளரக் கூடியது. இங்கு நாம் உலர் கனியாக தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையில் பேராதனையில் பயிரிடப்படுகிறது. இது ஓர் பாரம்பரிய மூலிகையுமாகும். இலகுவாக எல்லோர் வீட்டிலும் இருக்கக் கூடியது. அதனால் இதன் உயர்ந்த மருத்துவப் பண்புகளைக் கண்டு கொள்வதில்லை. இதில் கல்சியம், ரைபோபிளேவின், தைமின், இரும்புச் சத்து, பொஸ்பரஸ் போன்ற முக்கிய வேதியற்பொருட்கள் உண்டு. அத்துடன் ஓமத்தில் நார்ச்சத்து மற்றும் புரதச்சத்தும் காணப்படுகிறது.

ஓமத்தில் இருக்கும் தைமோல் எனும் வேதியற்பொருள் இருமல், ஆஸ்மா போன்றவற்றை நீக்கி நுரையீரலை பலப்படுத்தக் கூடியது. நுரையீரலில் ஏற்படும் தொற்றுக் களையும் நீக்கக்கூடியத்து.

அத்துடன் தைமோல் எனும் வேதியற் பொருளுக்கு பக்றீரியாக்களையும் வைரஸ் தொற்றுக்களுக்கும் எதிராக தொழிற்படும் ஆற்றல் உடையது.

நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்தக் கூடியது.

எனவே குழந்தைகட்கு கட்டாயம் ஓமம் சேர்த்த மருந்துகள் கொடுக்க வேண்டும்.

ஓமத்தில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இரத்தத்தில் கொலஸ்ரோலை அதிகரிக்க விடாது. இதனால் மாரடைப்பு போன்ற நிலைமை ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

ஓமத்தண்ணீர் அல்லது ஓமக்குடி நீரை குடிப்பதால் நிறைய ஆரோக்கியமான மருத்துவக் குணங்கள் கிடைக்கும்.


நிறைய நுண்போசனைக் கூறுகள் காணப்படுவதால் சமையலில் தாராளமாக பயன்படுத்தலாம். ஓமத்தில் Anti-oxidant தன்மை காணப்படுவதால் புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மையுமுண்டு.

ஓமத்தில் காணப்படும் தைமோல், கர்வகோல் போன்ற வேதியற்சத்துக்கள் ஈ-கோலய், சல்மோனல்லா போன்ற பக்றீரியாக்களுக்கு எதிராக தொழிற்படக் கூடியவை. மேற் கூறிய பக்றீரியாக்கள் கழிச்சலை ஏற்படுத்தக் கூடியது.

எனவே ஓமத்துக் குடிநீர் கழிச்சலை குணப்படுத்தக் கூடியவையாகும். அத்துடன் ஓமத் தண்ணீரானது பங்கஸ் தொற்றுக்களுக்கு எதிராகவும் தொழிற்படக் கூடியது.

ஓமத்தினீராக அல்லது ஓமத்தண்ணீராக 60 மில்லியிலிருந்து 100 மில்லி அளவு தினமும் எடுத்துவர கெட்ட கொலஸ்ரோலை நீக்கி நல்ல கொலஸ்ரோலை அதிகரிக்கச் செய்யக் கூடியது. இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பவர்களுக்கு ஓமம் சிறந்த மூலிகையாகும்.

அதாவது ஓமத்தில் இருக்கும் வெதியற்சத்துக்கள் Calcium chanel blockers மாதிரி தொழிற்படுகின்றது.



எப்படியெனில் கல்சியம் இருதயத்திற்கு செல்வதை தடைசெய்கின்றது. இதனால் இருதயத் தசைகளுக்கு அழுத்தம் குறைகிறது.

இது இரத்தக் குழாய்களிலும் பிரதிபலிக்கிறது. இதனால் அதி உயர் குருதி அமுக்கம் ஏற்படுவதை தடுக்கிறது. வயிற்றுப் புண் ( gastriculcer, Peptic ulcer) நோயாளிகளுக்கு சிறந்தது ஓமத் தண்ணீர் அதாவது அஸிடிற்றிக்கு எதிராக தொழிற்படக் கூடியது.

அஜீரணத்தையும் சீராக்கும் ஆற்றல் உண்டு. காலம் காலமாக பயன்படுத்தி வரும் ஓமத் தண்ணீருக்கு ஆய்வு முடிவுகள் கூட அதன் மருத்துவப் பண்புகளை உறுதி செய்வதாக உள்ளது.

உடம்பில் ஏற்படும் வலிகளையும் தணிக்கும் தன்மையுண்டு ஏனெனில் ஓமத்தில் வீக்க அணுக்களை குறைக்கக் கூடியது. ஓமத்தில் இருக்கும் சத்துக்கள் elastase நொதியத்தின் செயற்பாட்டை குறைக்கிறது.

இதனால் வீக்கம் குறைகிறது. மூட்டுக்களில் ஏற்படும் வலியும் குறைகிறது. ஓமத் தண்ணீரை கர்ப்பிணி பெண்கள் மட்டும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் இதில் இருக்கும் சில சத்துக்கள் கற்பப்பையிலிருக்கும் சிசுவை பாதிக்கலாம். ஏனெனில் சில ஆய்வுகளும் அதை உறுதிப் படுத்துகிறது.

சாதாரணமாக வயிற்று உப்பிசம், சமிபாடின்மை, அஜீரணம் போன்றன ஏற்படும் போது ஓமம், சின்ன சீரகம் இரண்டும் சம அளவு எடுத்து நன்கு பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். மேற்படி நிலைமைக்கு கால் தேக்கரண்டி பொடி எடுத்து 200 மில்லி வெந்நீரில் கலக்கி குடித்துவர குணமாகும்.

உடல் நிறையை குறைப்பதற்கு 2 தேக்கரண்டி வெந்தயத்தை சிவக்க வறுத்து எடுத்து. பின்பு 2 தேக்கரண்டி சீரகத்தை வறுத்து எடுத்து. ஓமம், 2 தேக்கரண்டி, வறுத்து எடுத்து அத்துடன் கொத்தமல்லி 2 தேக்கரண்டி வறுத்து எடுத்து ஒன்றாக மிக்ஸியில் பொடித்து எடுத்து ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் கலந்து எடுக்கலாம்.

வாசனை மூலிகைகளை வறுப்பதால் அதிலுள்ள எண்ணெய்த் தன்மை வெளியேறி நீண்ட நாள் பயன்படுத்தக் கூடியதாகவும் மாறக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச உத்தி...

பணிபுரியும் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த நிரஞ்சன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை குளத்தின் வான்பகுதிக்குச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் அவர் திரும்பாதன் காரணத்தால் அவரது நண்பர்கள் அவரைத் தேடிச் சென்ற வேளை அவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,250)

## யாழில் எலிக்...

மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 11 பேருமாக மொத்தம் 39 பேர் எலிக்காய்ச்சலுக்காகத் தற்சமயம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹஜன சம்பத
திகதி 2024.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 5686
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 1 5 2 5 7 9
அத சம்பத
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 2 5 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 261
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1716
Y 02 19 50 56 Y
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 42435
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 15/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2034
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
G 18 19 36 44 47
Double Chance 010846
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

லக்கி 7 VIP
திகதி 2024.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 512
Z 5 8 5 5 6 2 Z
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3928
சீட்டிழுப்பு திகதி | 15.12.2024
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 14 22 61 66
M
127711
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 995
வெற்றி இலக்கங்கள்
மகரம் 06 29 51 54 மகரம்
தன யோக இலக்கம் 003811 தேசிய லொத்தர் சபை நாளுக்கான விதி எண் 38

அதேநேரம், கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கரவெட்டி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் எலிக்காய்ச்சலால் நேற்று உயிரிழந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## சிறீதரன்...

மன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் ஒட்டாவாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, கனடாவின் வெளிவிவகார அமைச்சின் இந்தோ - பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதியமைச்சர் வெல்டன் எப்பை சந்தித்து உரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஒட்டாவாவில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அதன்போது பொறுப்புக்கூறல், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் சமகால அரசியல் சூழல்கள், தமிழ் மக்களின் நெருக்கடிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகப் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய பிரதியமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி வரை கனடாவில் தங்கியிருக்கவுள்ள சிறீதரன் எம்.பி. அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வடக்கில் படிப்படி...

எதிர்வரும் காலங்களில் படிப்படியாக விடுவிக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தற்போது படையினரிடம் உள்ள காணிகள் 2025ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விடுவிக்கப்படும்.

அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்த வருடம் ஆயிரத்து 303.42 மில்லியன் ரூபாய் நிதி செலவழிக்கப்பட்டுள்ளது" என்றார். (ந-7)

## பொலிஸ் உத்தி...

கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேரை இடைநிறுத்தினார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தமது கையில் இருந்த கண்ணாடிப் போத்தலால் தாக்கியுள்ளார். குறித்த தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்கள் அனைத்தும் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ந-7,310)

## தொடர் மழை...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதேபோல சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் இரு குடும்பத்தைச் சேர்ந்த 09 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள் இரண்டும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 135 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும், இரண்டு அடிப்படைக் கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன. இரண்டு பாதுகாப்பு நிலையங்களில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 123பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்றும்பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேரும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 336 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## மகி...

அந்தக் கட்சியின் உறுப்பினரான சட்டத்தரணி மனோஜ் கமகே இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது,

"மகிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த 116 பாதுகாவலர்கள் ஒரே தடவையில் நீக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு மீளாய்வின்றியே இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பாதுகாப்புக் குறைப்பின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவைக் கொலைசெய்வதற்குரிய சூழ்ச்சித் திட்டம் உள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த உணவுப் பரிசோதகர்கள்கூட நீக்கப்பட்டுள்ளனர். உலகில் உணவில் விஷம் கலந்து தலைவர்களைக் கொலை செய்த சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உணவுப் பரிசோதகர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களை உடன் நீக்கியமைக்குக் காரணம் என்ன? என்று அரசைக் கேட்கின்றோம்.

கனடாவில் இருந்து செயற்படும் தமிழ் டயஸ்போராக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது. வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன.

மகிந்தவின் பாதுகாப்பு நீக்கப்படுகின்றது. இது டயஸ் போராக்களின் தேவைக்காக நடக்கின்றது. மகிந்த ராஜபக்ஷவைக் கொல்வதற்குரிய களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றதா? என்ற வினா எழுகிறது.

மகிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு அவசியம். எனவே, பாதுகாப்பைக் குறைக்கும் திட்டத்தை இந்த அரசு மீளப் பெற வேண்டும்" என்றார். (ந-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.12.2024 வெற்றி வாரம் 394 வர்ணம்
ஆங்கில எழுத்து T மற்றும் வெற்றி இலக்கம் 2 5 4 0 4 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,277,838.80
18516
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2660 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2024.12.15 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 47 48 59 ஆங்கில எழுத்து A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,009,996.00
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
திகதி 15.12.2024 வெற்றி வாரம் 4821 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 01 41 44 46 ஆங்கில எழுத்து L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,441,878.80
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 77948
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4372 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 15.12.2024 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 23 58 59 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,886,090.80
218547
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 38 13 16 51 72
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1836
15.12.2024 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,292,657.40
DLB வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 579
சீட்டிழுப்பு திகதி 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 34 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2486
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2024.12.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,403,510.40
வெற்றி இலக்கங்கள் 12 32 47 55 ஆங்கில எழுத்து N
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 544674
DLB www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சுக்கு முன் போராட்டம் மேலும் மூவர் கைது

16,000 பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் தொழிலில் உள்வாங்குமாறு கோரி கல்வி அமைச்சுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டு இருவர் கடுவெல பதில் நீதவான் டெலனி முனசிங்க முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மற்றைய நபரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-7)

### விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (2765)

திருமுருகன் கொம்நெற்

பணியாளர் தேவை

321, K.K.S Road, Jaffna.

077 755 4528

### மணமகள் தேவை
[சூரியன் / செவ்வாய்]

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த தொழிலதிபராகப் பணி புரியும் மணமகனுக்கும் 1994, சதயம் நட்சத்திரம், Finland Citizen உள்ள மணமகனுக்கும் மணமகள் தேவை.

077 990 6328
077 600 7775 (2758)

### யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். (636)

அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

48/= ~~80/=~~

Happy Supermarket
உரும்பிராய்

077 121 5546 / 077 780 8030

### V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1807)

### தேவை

யாழ். நகர் மத்தியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் தயாரிக்கக் கூடியவர் மற்றும் சமையல் உதவியாளர் உடன் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை. வேலையின் தரம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். (635)

077 873 8834

### வேலையாள் தேவை

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் வசிக்கும் வயதான பெண்மணியை வீட்டில் தங்கியிருந்து கவனிப்பதுடன் சமையல் வேலைகளிலும் வீட்டு வேலைகளிலும் உதவ ஒரு பெண் உதவியாளர் தேவை. நேர்மையானவராகவும் வேலைகளை நேர்த்தியாகச் செய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும். 45 - 55 வயதிற்குள் குடும்பப் பொறுப்பு அதிகமில்லாதோர் விரும்பத்தக்கது. யாழ்ப்பாணத்தை அண்டிய வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். (631)

077 301 7914, 077 792 1890

### சிறிராம் ஜுவல்லர்ஸ்





புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை

22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும். (C-1772)

இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 165 1729, 077 773 0567, 021 222 8334

### காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

1 பரப்பின் விலை : 24 இலட்சம் ரூபாய் [ 24 00 000/= ]

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.
- UDA சான்றிதழ் பிரதேச சபை சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும். (2757)

076 298 1105, 076 017 1105

## 31 ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.11.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் திரு. அழகசுந்தரம் கிருபாகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.12.2024 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 19.12.2024 வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் **துர்க்கா மணி மண்டபத்தில் (நல்லூர்)** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

077 722 5292 (C-1808)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.